P. N. APPUSWAMI AIY
1552
(8407)

ஸ்ரீ

திருஞான முத்திரை துணை



# ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமி பேரில்

# கிளிக்கண்ணி

அபிநவ காளமேகம்
அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்
ஸ்ரீமத்
ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்காரவர்கள்,
ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தானவித்வான்,
தென்றிருப்பேரை.

இரண்டாம் பதிப்பு

விலை அணா 1]    1937    [பதிப்புரிமை

மகாமகோபாத்தியாய
டாக்டர், உ. வே. சாமிநாதையர்

முதற்பதிப்பு—1903.

———

விருதுநகர்,

சச்சிதானந்த அச்சியந்திர சாலையில்

இரண்டாம் பதிப்பு.

1937


Lord Krishna

# சிறப்புப் பாயிரம்

திரிசிரபுரம், எஸ். பி. ஜீ. காலேஜ் தலைமைத்
தமிழ்ப் பண்டிதரா யிருந்த மகா-ா-ா-ஸ்ரீ
**பிச்சையிபுருகிம் புலவர்** இயற்றிய
**வெண்பா.**

கனந்தகைமால் போற்சேரும் காவுளதென் பேரை
அனந்த கிருட்டிணப்பே ரன்பன்—இனந்துளவஞ்
சூடினா னன்பர்முடி சூடுந் திருவடிமேற்
பாடினான் செய்யகிளிப் பாட்டு. 1.

தித்திக்கும் பாலென்கோ தேனென்கோ மேலருள்சேர்
முத்திக்குச் சேர்க்கு முறையென்கோ—எத்திக்காங்
கேள்வி யனந்த கிருட்டிணப்பேர் நாவலன்சொல்
வேள்விதரு மிந்நூலை வேட்டு. 2. [1900-ம் ௵]

திண்டுக்கல், ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,
ஆயுள்வேத நிபுணருமான மகா-ா-ா-ஸ்ரீ
**வீராசாமிப்பிள்ளை அவர்கள்** இயற்றிய
**வெண்பா.**

ஏய்ய வனம்வயலிற் சூழுந் திருப்பேரை
செய்ய வனந்தகிர்ஷ்ணன் செப்பினான்—செய்யுளியல்
வல்ல புலவோர் மதித்திடவே கண்ணனுக்கு
நல்லகிளிக் கண்ணி நயந்து. [1900-ம் ௵]

திரிசிரபுரம், எஸ். பீ. ஜீ. காலேஜ் தமிழ்த் தலைமைப்
பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ அமிர்தம்பிள்ளையவர்கள்
குமாரர் **சுந்தரநாத பிள்ளையவர்கள்** இயற்றிய
**கட்டளைக்கலித்துறை.**

---

அங்கா லனங்கள் மடவார் நடைகற்க அன்னவர்நீர்
அங்காடு பொய்கையிற் சேர்திருப் பேரை அனந்தகிர்ஷ்-
[ணன்
சங்காழி மாயனுக் கன்பாக் கிளிக்கண்ணி சாற்றினன்-
[பொற்
சங்காழி வேந்த ரிடம்பெறு நாவலர் தாமெச்சவே.
[1900-ம் வரு]

இந்நூலாசிரியரின் தமையனார், கவி-ஸ்ரீ பிச்சுவையங்கார்
குமாரரும், ஸ்ரீமான் P. S. ஆச்சாரியரின் கனிஷ்ட
சகோதரருமான பாலகவி **அனந்தராமையங்கார்** இயற்றிய
**வெண்பா.**

---

கற்றப்பா நல்விரதங் காணும் புலவரெலாந்
தெற்றப்பா வீதென்றே செப்பாரென்—சிற்றப்பன்
கண்ணாற் கியற்றுகிளிக் கண்ணிதனக் கின்னமுதை
மண்ணுலகி லொப்புரையா மல். [1900-ம் வரு]

ஸ்ரீ
திருஞானமுத்திரை துணை

# கிளிக் கண்ணி

## காப்பு

### வெண்பா

விண்ணுறுமின் போன்றவிடை மின்னார் விரும்பியணை
கண்ணபிராற் கேற்றகிளிக் கண்ணிசொல—தெண்ணலஞ்
வாரிமா றுதமலர் வாவித் திருக்குருகூர்க் [சேர்
காரிமா றன்கழலே காப்பு.

## நூல்

மாதுளவ வாசனடி வண்டுவரை வாசனடி
கோதறு பொன் வாசனடி கிளியே
கோஷியர்க ணேசனடி. 1

பாரளந்த பாதனடி பாண்டவர்கள் தூதனடி
தேர்விசயன் சூதனடி கிளியே
செப்பகுழைக் காதனடி. 2

அஞ்சுபடைக் கையனடி ஆண்மைமிகு மையனடி
மஞ்சுநிற மெய்யனடி கிளியே
வையமதின் மெய்யனடி. 3

துங்கமணிக் கண்ணனடி சுபத்திரைக்கிங் கண்ணனடி
செங்கமலக் கண்ணனடி கிளியே
திகழுமணி வண்ணனடி. 4

பலராம னுக்கிளையான் பற்றலர்க ளுக்கிளையான்
குலயாத வக்கிளையான் கிளியே
கூறும் புரி வளையான். 5

கஞ்சனைக் கொன்றகாலன் கஞ்சமல ரின்காலன்
வஞ்சகருக் காலகாலன் கிளியே
மாயவ னநேக காலன். 6

பூதனை யைக் கெடுத்தான் போரினிற் சங்கெடுத்தான்
சீதமிகு மப் படுத்தான் கிளியே
சேட வணைமேற் படுத்தான். 7

வையுமச் சிசுபாலன் மாளவேசெய் கோபாலன்
செய்ய யசோதை பாலன் கிளியே
தேவர்களுக்கனு கூலன். 8

பதினாறு யிரந்தாரன் படிந்திடுநன் முத்தாரன்
மதிமிகு நல் லுதாரன் கிளியே
வணங்கார்க் கதிக தூரன். 9

வெண்ணெய்த் திருடியுண்டான் வேணுவைக் கையிற்– [கொண்டான்
திண்ணியமத் தடி யுண்டான் கிளியே
தீயவ ரகத்தி லண்டான். 10

உத்தவர்க்கதிக நேசன் ஒளிருநன் மந்த காசன்
பத்தரிடத் திற்பாசன் கிளியே
பாற்கரனைப் போற்ப்ர காசன். 11

தேவர்தருப் பூநட்டான் தேனுகனை முன்னட்டான்
கோவலர்மின் னாரை நட்டான் கிளியே
கொடியவரை வாழ வொட்டான். 12

ஈடி லழகார் தேகன் இராதைக் கதிகமோகன்
நாடிய சுக போகன் கிளியே
நல்வதன புண்ட ரீகன். 13

நீங்காத வாசமலர் நிறைந்து பரிமளிக்கும்
பூங்கா வனந்தனில் யான் கிளியே
போதுகொய்யப் போயிருந்தேன். 14

அந்தச் சமய நோக்கி ஆரகே யூர மின்னச்
சுந்தரநன் மேகம் போலக் கிளியே
தூயவனு மங்கே வந்தான். 15

வந்தவெழின் மாயவனை வாஞ்சை மிகுதியினாற்
கந்தமலர் கொய்யாமலே கிளியே
கண்ணாரக் கண்டேனடி. 16

அட்டாங்க யோகங்கள் அவனியிற் செய்பவர்க்கும்
எட்டாத ஸ்ரீ கிர்ஷ்ணனை கிளியே
இட்டமுறப் பார்த்தேனடி. 17

சிவனயன் புரந்தரனுஞ் செவ்வேளும் மன்மதனும்
அவனழகுக் கீடாவரோ கிளியே
அண்டபகி ரண்டனடி. 18

துங்க முலை குழையத் துவரின்வாய்க் கோவியர்கள்
இங்கவனைச் சேருதற்குக் கிளியே
என்னதவஞ் செய்தார்கொலோ! 19

இளநிலவின் முறுவல் என்முன்செய் ததையெண்ணி
உளமிகப் பூரிக்குதே கிளியே
உரோமம் பொடிக்குதடி. 20

சிறந்தநல் வேதியர்சொல் சீர்வேதப் பொருளென்றே
அறிந்து மவன்றனை யான் கிளியே
அன்பாகக் கேட்க லுற்றேன். 21

ஆருமில் லாதவேளை ஆராமந் தன்னில்வந்தாய்
ஊருடனின் பேர்தனையுங் கிளியே
ஒளியா துரைப்பா யென்றேன். 22

பல பல ஊருமுண்டு பல பல பேருமுண்டு
நலமுட னுன்றனக்குக் கிளியே
நானெதனைச் சொல்வே னென்றான். 23

முக்கிய ஊரும்பேரும் முறையாகச் சொல்வாயென்ன
தக்ககுண மாதவனுங் கிளியே
சாற்றுகின்றேன் கேளா யென்றான். 24

என்றன்பேர் வாசுதேவன் இருப்பிடந் துவாரகையாம்
மன்றலங் குழல் மடவாய் கிளியே
வையமதில் மெய்யீ தென்றான். 25

கொத்தலர் நந்தனத்துக் கூடுமக் கோவிந்தனை
யெத்தையெண்ணி யிங்கேவந்தாய் கிளியே
என்றேநான் கேட்டேனடி. 26

மதனபூ சைகள்செய்ய மலர்கொய்வா னிங்குவந்தேன்
மதிமுக மின்னரசே கிளியே
மனது பொறுப்பா யென்றான். 27

இரவுவர லாயிற்றே ஏகமா யிருக்கின்றேன்
விரைவுட னெங்கே யாயினுங் கிளியே
விரைமலர்கள் கொய்வா யென்றேன். 28

தனித்திருக் கின்றேனென்று சற்றும்நீயஞ்சவேண்டாங்
குனித்தவில் நன்னுதலாய் கிளியே
கூடவிருக் கின்றேனென்றான். 29

துணையாயிருப்பேனென்பாய் துறவினா னென்றுஞ்சொல்-
அணைய அணை மீதெனைக் கிளியே [வாய்
அருங்கபடஞ் செய்வா யென்றேன். 30

ஆதலாற் போதோடு நீ அருமணப் போதுகொய்தே
சீதர நீ செல்வாயெனக் கிளியே
செய்கிறேனவ் வாறே யென்றான். 31

அவனும் மலர்கள்கொய்தான் அங்கேதான் நானுங்கொய்-
நவவளை யொலிக்குமென்றன் கிளியே [தேன்
நற்கரந் தனைப்பிடித்தான். 32

காந்தி மதிமுகனே கையேன் பிடித்தாயெனக்
காந்தள் மலரோ என்றே கிளியே
கைதனைப் பிடித்தே னென்றான். 33

வஞ்சகன் பின்னுஞ்சில மாமலர் கொய்துவிட்டென்
நெஞ்சினுறு மெல்லாடையைக் கிளியே
நேரா யிழுக்க லுற்றான். 34

சற்றுநீ யஞ்சாமலென் தானையைத் தொட்டிழுத்தாய்
முற்றுமுணர் கோபாலனே கிளியே
முறைமையோ உனக்கி தென்றேன். 35

கொங்கலர் கொய்யுமென்மேற் குற்றமே சற்றுமில்லை
கொங்கைமலர்க் கொத்தினைப்போல் கிளியே
குறித்திட என்தோன்றிற் றென்றான். 36

பூக்கொய்ய வந்தேனென்றாய் புடவையைத் தொட்டிழுத்
சீக்கிரம் மலர்கள்கொய்து கிளியே [தாய்
சீதரநீ போவா யென்றேன். 37

வாகுமதன் பூசைக்கு மாலைவர லாயிற்று
போகப் பிரியமுற்றேன் கிளியே
போகவழி காட்டா யென்றான். 38

சூடுங் கலாபனேநீ சூதான வார்த்தைகூறேல்
கூடப் பிறந்தவளாய்க் கிளியே
கொள்வையெனை யென்றே சொன்னேன். 39

மாதி னரசேயுன் றன் வார்த்தைபோற் செய்கின்றேன்யான்
போதுடனே யென்றனுக்குக் கிளியே
போகநெறி சொல்வா யென்றான். 40

கொடியினாற் செய்தஅந்தக் கோல மனைக்கருகில்
அடிகொள்ளும் பாதையுண்டு கிளியே
அவ்வாறு செல்வா யென்றேன். 41

அடிகொள்ளும் பாதையென்றாய் அவ்வழி விடிந்துசெல்-
கொடியறையைக் காட்டுதற்குக் கிளியே [வேன்
கூடவே வா வென் றுரைத்தான். 42

கூடவே நானுஞ்சென்று கோலக் கொடியறையைத்
தேடரிய மாதவற்குக் கிளியே
தெரியவே காண், பித்தேனடி. 43

பூவாய் மதுவுமுண்டு பூம்பொழிற்செங் கனியுண்டு
தேவாநீ யுண்டுறங்கிக் கிளியே
சேர்வைவிடிந் தாருக் கென்றேன். 44

கண்ணற்கு வைகறைநான் காட்டவே சூரியனும்
மண்ணுலகோர்க் கந்திகாட்டக் கிளியே
மறைந்தனன் குடபா லந்தம். 45

நானும்வை கறை காட்ட ஞாயிறு மந்திகாட்ட
வானும் மதியங்காட்டக் கிளியே
மாரன்சந்தி பண்ண லுற்றான். 46

ஆசு கவிப்புலவோர்க் களிக்குங்கொடையாளர்தந்
தேசுப் புகழ்போலவே கிளியே
சீர்நிலவு வாய்ந்ததடி. 47

இருளின் குழாமவ்வேளை யிரப்பவர்க் கீயாதவர்
பொருள்போல நாசமுற்றுக் கிளியே
பூமியில் மறைந்ததடி. 48

கண்ணன் திருமுகத்தைக் கண்ட தடத்தாமரை
தண்ணீரில் நாணினாற்போற் கிளியே
தம்முகங் குவித்துக்கொண்ட. 49

மலரோடை யாகுநங்கை மாயனைக் கண்ணுறல்போல்
மலருங் கருங்குவளை கிளியே
வளமாத் திகழ்ந்ததடி. 50

வீர மலர்ச்சாயகன் வெளிப்புறப் பட்டானென்று
பேரிகை கொட்டினாற்போற் கிளியே
பெருங்கடல் முழங்கிற்றடி. 51

சேயான வீமன்சுகந் தெரிந்திட வந்தாற்போல
மாயோ னிட நாடியே கிளியே
மலயா நிலம் வாய்ந்ததடி. 52

அன்னையென் றெண்ணி யென்னை அருச்சனை செய்வான்-
கன்னல்வில் மன்மதனுங் கிளியே [போல்
கடிமலரைத் தூற்ற லுற்றான். 53

வீசு நிலவெனக்கு வெயிலெனவே யெறிக்க
வாசமலர் மேவிவருங் கிளியே
மாருதந்தீப் போன்றதடி. 54

வீட்டிற்குப் போகவேண்டும் விடையருளென் றனக்குக்
காட்டு மறைதனிலே கிளியே
கண்வளர்வை கண்ணுவென்றேன். 55

பொங்கு நிலவில் நீயும் போகப் பிரியமுற்றாய்
கங்குலி லரைக்கணமுங் கிளியே
கண்ணுறங்கு வேனோவென்றான். 56

சின்னஞ் சிறியவள்யான் சேருமிவ் விரவினில்
உன்னுடனே நானிருந்தால் கிளியே
ஊர்வசைசொல் லாதோ வென்றேன். 57

பயமாங் கடல்தனிலே படிந்த வென்னையிரவில்
நயந்து தனித்துவைத்தல் கிளியே
ஞாயமோ வுனக்கீ தென்றான். 58

மன்றலு மாகவில்லை வயதோ பருவமுற்றேன்
இன்றிரவி லுன்னுடனே கிளியே
இங்கிருக்க லாமோ வென்றேன். 59

என்றும் பிரமசாரி யென்றே பரீட்சித்துக்கு
அன்றருள்நான் செய்ததை நீ கிளியே
அறிந்திலையோ வென்றே சொன்னான். 60

தையல் சுபத்திரையைத் தக்களதி நானென்று
செய்யுவிசயன் மோசங் கிளியே
செய்த தறியேனோ வென்றேன், 61

நித்தியப் பிரமசாரி நிலத்தி லொருவன் நானே
இத்தையறிந் தென்னுடனே கிளியே
ஏனிருக்கக் கூடா தென்றான். 62

நீணிலந் தன்னில் மாதர் நிறைந்த நெய்க் குடம்போல்வார்
ஆணவப் புருடர் யாருங் கிளியே
அருங்கனலை யொப்பாவரே. 63

ஆகையால் நெய்க்குடத்தை அருங்கனற் கருகினில்
ஏகமாய் வைத்திருந்தால் கிளியே
இளகாதோ வென்றேனடி. 64

வஞ்சியே யிந்த வெண்ணம் வஞ்சியே யுன்றனையான்
அஞ்சு புலனெனக்குக் கிளியே
அஞ்சுபுல னுகு மென்றான். 65

சீதர னிந்தவிதம் செப்பவே சம்மதித்துச்
சூதொன்று மெண்ணமலே கிளியே
துணையாயிருக் கின்றேனென்றேன். 66

இருக்கின்றே னென்றவுடன் இனியநற் றேனுடனே
தருக்களின் கனி கொணர்ந்து கிளியே
சாப்பிடுவோ மென்றே வைத்தான். 67

நானு மவனுமாக நறவுடன் கனியுண்டு
மானுங் கலையும்போலக் கிளியே
மகிழ்ச்சிமிகக் கொண்டோமடி. 68

சூட்ட மலர்கொணர்ந்தான் சுகமாய்ப் படுப்பதற்கு
வாட்டமிலா நன்மலரைக் கிளியே
வாய்ந்தவணை யாய்விரித்தான். 69

விரித்த மலரணையில் மேவியே நான் படுத்தேன்
சிரித்தமுகக் கோபாலனுங் கிளியே
திரும்பியொரு பாற்படுத்தான். 70

அவனை அணையமிக ஆசைநான் கொண்டிருந்தும்
நவமான தாலெனக்குக் கிளியே
நாணம் மிகுந்ததடி. 71

நாண மிகுதியினால் நானொரு பாற்றிரும்பி
பூனொளிசெய் யத்தலத்திற் கிளியே
பொய்யுறக்கஞ் செய்தேனடி. 72

ஆசாரக் கள்ளனைப்போல் அவன்என்றன் கொங்கைகளைக்
கூசாது கைப்பற்றவே கிளியே
கோவல என் செய்தா யென்றேன். 73

மருமலர் கொய்யும்போதென் மனத்தினை யுன்றன் தனம்
திருடியதால் நானுமதைக் கிளியே
தேடினேன் கையாலே என்றான். 74

உன்றன் வடிவமென்றன் உள்ளத்தைத் திருடினால்
என்றன் தன முன்மனத்தைக் கிளியே
என் திருடா தென்றுரைத்தேன். 75

ஒருவ ருளத்தை யிங்கே ஒருவர் திருடுவதால்
இருவரு முறங்காமலே கிளியே
இருப்போ மென்றேயெழுந்தான். 76

விடிகிற மட்டும் நாமே விழித்தே யிருக்கவேண்டும்
நெடியவ! விநோதவார்த்தை கிளியே
நிகழ்த்துவைநீ யேதேனென்றேன். 77

சாகரத்தில் வானரங்கள் தாசரதிக் காகமுன்னம்
ஏகமதாய்க் கட்டினதைக் கிளியே
இன்னதென் றுரைப்பா யென்றான். 78

அம்மொழியைக்கேட்டவுடன் அணையென்றேயா னுரைக்க
மைம்முகிலும் மின்னலும்போற் கிளியே
வாய்ந்ததெனச் சேர்ந்தணைந்தான். 79

சோதரி யாக வென்னைச் சூட்சித்துப் பார்ப்பேனென்று
சீதரமுன் சொல்லிப்பின்பு கிளியே
சேர்ந்தணைய லாமோ வென்றேன். 80

கூடப் பிறந்தவளாய்க் கொள்ளென்றாய் அணையென்றாய்
ஆடக நிறப்பேதையே! கிளியே
அவ்விதமே செய்தேனென்றான். 81

பக்கமாச் சொல்லிப் பின்னும் பயிருங் கதிருமாகி
பக்கமுள்ள நல்வயலைக் கிளியே
பாரிதன்பே ரென்ன வென்றான். 82

இன்பநல் வாசுதேவ! இருபோகஞ் செய்யென்றேன்யான்
அன்புடனே யென்றனிடங் கிளியே
அரும்போகஞ் செய்பனுற்றான். 83

கனிவாயுண் டென்றனத்தைக் கனிவாகக் கைப்பற்றியே
இனியநன் முத்தந்தந்து கிளியே
இன்பவளந் தந்தானடி. 84

கவிநயங் கண்டளிக்குங் கனதன வானைச்சேர்ந்த
கவிவாணர் தம்மைப்போலக் கிளியே
களிப்புமிகக் கொண்டேனடி. 85

என்னதவஞ் செய்தேனோ? என்முன்னோர் தவப்பயனோ?
என்னையோர் பொருளாயெண்ணிக் கிளியே
இன்புறவே சேர்ந்தானடி. 86

வாமநூற் காந்தருவ வகையா யெனைமணந்து
காமநூற் றன்மையெலாங் கிளியே
காட்டிக் கலந்தானடி. 87

நல்வி ரதமவனும் நானு மனுபவித்தோம்
செல்விரத மீதேறியே கிளியே
தினகர னும் வந்தானடி. 88

பொழுது விடிந்தவுடன் போய்வரு கின்றேனென்று
செழுமைமிகு மென்றனிடங் கிளியே
சீதரன்றான் சொன்னானடி. 89

பிரிய மனத்தினன்போற் பேசி யணைந்தேயென்னை
பிரியமனங் கொள்வாயாகிற் கிளியே
பேதையேன் சகியே னென்றேன். 90

அஞ்சேல் விழிமடவாய் அஞ்சேல் நீவிடைகொடு
கொஞ்சத் தினத்திலுன்னைக் கிளியே
கொஞ்ச வரு கின்றே னென்றான். 91

விரைவாய் வருவேனென்று விளம்பி அணிதிருத்தி
சரசமா யணைந்து முத்தங் கிளியே
தந்துவெளிச் சென்றானடி. 92

வருகிறே னென்றுபோன மாயன்வ ராததாலே
விரியு நிலவெனக்குக் கிளியே
வெயிலெனவே தோற்றுதடி. 93

அங்கம் மெலிந்ததடி ஆகாரஞ் சற்றுமில்லை
இங்கெதையா னேக்கினுலும் கிளியே
எனக்கவன்போற் காண்கின்றதே. 94

விரகாக்கினி நடுவில் மேவுமென் பால் அவனை
விரைவாகக் கூட்டி வந்தாற் கிளியே
வீயாது வாழ்வேனடி. 95

இருப்பிடந் துவாரகையாம் எழில்வேங் கடமலையாம்
பொருப்பு மா லிருஞ்சோலை கிளியே
பூம்பொழில் விருந்தாவனம் 96

மையணி மாடமீது மடவார்கள் மின்போற்றிகழ்
செய்யதிரு வல்லிக்கேணி கிளியே
செம்பொன்மதிற் கண்ணபுரம் 97

காவிரி நீர் நலத்தாற் காவிரி தென்னரங்கம்
பூவிரி தடக்குருகூர் கிளியே
பூவைநல்லார் வாழ்குடந்தை 98

வைகுந்தம் புளிங்குடி வரகுண மங்கைநகர்
செய்களிற் கரும்போடுநெல் கிளியே
சேர்தொலைவில் லிமங்கலம். 99

தளந்தனையு டைய செந் தாமரை வாசத்தடக்
குளந்தனில் நன் னீர் பெருகுங் கிளியே
குளந்தை திருக் கோளூராகும். 100

வீணையின் நாதம்போல்நல் வேதகீதம் முழங்கச்
சேணிலம ராவதிபோற் கிளியே
சீர்மிகுந் தென் திருப்பேரை. 101

வனச மலர்கள்நிறை வாவிசேர் வரமங்கை
பனச ரசம் பெருகும் கிளியே
பைம்பொழிற் குறுங்குடியாம். 102

பொன்னெழின் மாடமேவு புதுவைபுல் லாணி மெய்யாம்
அன்ன வயற்றென் கோட்டியூர் கிளியே
அநந்த புரம் நல் வாட்டாறு. 103

சோதிப் பரமபதந் தூய திருப்பாற்கடல்
வேதம் அன்பர் உள்ளமவன் கிளியே
மேவி வசிக் குந்தலங்கள் 104

இங்கெல்லாந் தேடியவற் கென்றன் நிலைமைசொல்லி
மங்களமாக் கூட்டிவைத்தால் கிளியே
மறவே னுனை யென்நாளுமே. 105

என்றனைப் பிழைப்பிக்கும் இனிய சஞ் சீவிநீயே
என்றனக்குத் தாயும் நீயே கிளியே
இன்பமொடு செல்வாயடி. 106

நம்புமென் காதலனை நயந்துநீ கூட்டிவந்தால்
அம்புவன முள்ளமட்டும் கிளியே
அகமகிழ்ந்து வாழ்வாயடி. 107

கொய்மகிழ் மாறனருள் கொண்ட வநந்தகிர்ஷ்ணன்
செய்யு ளுணர்ந் தோர் போலக் கிளியே
சீர்த்தியுடன் வாழ்வாயடி. 108

**(கிளிக்கண்ணி முற்றிற்று.)**

கண்ணபிரான் திருவடிகளே சரணம்.